முறையிலும் நம்முடைய அலுவலர்களும் கொஞ்சம் ஒதுங்கிக்கொள்கிறார்கள். அந்தந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய பொதுமக்களுடைய மனதிலே ஒரு மாற்றம் ஏற்பட்டால்தான், இது போன்ற சங்கடங்களை அரசு சந்திப்பதைத் தவிர்க்க இயலும்.

இருந்தாலும் இப்போது தொடர்ந்து புதிய ஆக்கிரமிப்புகள் வராமல் பாதுகாக்கப்படுகிறது. தேசிய நெடுஞ்சாலைகள் எல்லாம் நான்கு வழிச் சாலைகளாக அகலப்படுத்த வேண்டிய நேரத்திலே, ஏற்கெனவே பட்டாக்கள் பெறப்பட்டு கோயில்கள் அமைக்கப்பட்டிருந்தாலும், வழிபாட்டுத் தலங்கள் அமைக்கப்பட்டிருந்தாலும்கூட, இப்போது அதற்கான இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு, அவை உரிய முறையிலே வேறு இடத்திலே மாற்றி அமைக்கப்படுகின்றன. எனவே, மாநில நெடுஞ்சாலைகளிலே இப்போது புதிதாக விரிவாக்கம் செய்யக்கூடிய, நிகழ்வுகள் ஏற்பட்டாலும் அதனை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். எனவே, அந்தந்தப் பகுதிகளினுடைய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும். அதைப்போல பல்வேறு அரசியல் கட்சிகளுடைய கொடிக் கம்பங்கள், மின் கம்பங்கள், விளம்பரப் பலகைகள் எல்லாம் அகற்றப்படவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். எனவே, அவை தொடர்பாக தொடர்ந்து எச்சரிக்கை செய்யப்பட்டு வருவதுடன் விளம்பரப் பலகைகள் வைக்கப்படுமேயானால், முறையாக அதற்கு அனுமதி பெறவேண்டுமென்கிற உத்தரவும் வழங்கப்பட்டிருக்கிறது; அதற்கேற்ப தொடர்ந்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

TRUTH ALONE TRIUMPHS

49—

கட்டட வசதி

***65194—திரு. அ. ராஜன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் தொகுதி, ராஜாக்கமங்கலம் ஒன்றியம், கேசவன்புத்தன்துறை மீனவர் பகுதியில் மீன் பதப்படுத்தும் குளிர்சாதன வசதிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2010 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி, ராஜாக்கமங்கலம் ஒன்றியம், ராஜாக்கமங்கலம்துறையில் BOOT முறையில் ரூ.4,200 கோடி மதிப்பீட்டில், தனியார் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்துறைமுகத்தில், மீன் பதப்படுத்தும் மற்றும் மீன்களைப் பாதுகாக்கும் குளிர்பதன அறைகள் மற்றும் பனிக்கட்டி நிலையம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. கேசவன்புத்தன்துறை மீனவ கிராமம், ராஜாக்கமங்கலம்துறை மீனவ கிராமத்திற்கு மிக அருகிலுள்ள மீனவ கிராமம் ஆகும். ஆகவே, ராஜாக்கமங்கலம்துறை மீன்பிடித் துறைமுகம் முடிவடையும்போது, கேசவன்புத்தன்துறை மீனவர்கள் அதனைப் பயன்படுத்திட ஏதுவாக அமையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

திரு. அ. ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள், ராஜாக்கமங்கலம்துறையில் தனியார் துறைமுகம் வருகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நன்றி. அதே நேரத்தில் மாண்புமிகு முதல்வர், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞருடைய வரலாற்றுச் சிறப்புமிக்க ஆட்சியில்தான் மீனவ சமுதாய மக்களுக்கு ஏராளமான நன்மைகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஆரோக்கியபுரம், கோவளம், இனையம்புத்தன்துறை போன்ற கடற்கரை கிராமங்களில் மீன் பதப்படுத்தக்கூடிய குளிர்சாதன வசதி இருக்கிறது. எனது தொகுதியிலுள்ள கேசவன்புத்தன்துறை மீனவ கிராமத்தையொட்டி பெரியகாடு, புத்தன்துறை, புளிக்கரை, பள்ளம், அன்னை நகர், மணக்குடி போன்ற மீனவ கிராமங்கள் இருக்கின்றன. கடலில் பிடிக்கப்படும் மீன்கள் அங்கு விற்கப்படுவதோடு, வெளி மாநிலங்களுக்கும் செல்கின்றன. சுனாமிக்குப் பிறகு, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான் எங்கள் பகுதியைச் சார்ந்த மீனவர்கள் முன்னேற்றம் அடைந்து வருகின்றார்கள். குளிர்சாதன வசதிக் கட்டடம் இல்லாததால், தாங்கள்

கஷ்டப்பட்டு பிடிக்கக்கூடிய மீன்களை மீனவர்கள் உரிய விலையில் சில சமயம் விற்க முடியாத நிலை உள்ளது. எனவே, தாய் உள்ளம் கொண்ட தலைவர் கலைஞருடைய ஆட்சியில் நிச்சயமாக அங்கே குளிர்சாதன வசதி கொண்ட மீன் பதப்படுத்தும் கட்டடத்தை அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேசவன்புத்தன்துறை ஒரு சிறிய மீனவ கிராமம். சுமார் 64 நாட்டு படகுகளில் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 418 பேர் மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: பிடித்துவரும் மீன்களை அன்றையதினமே பொது ஏலத்தில் விற்பனை செய்து வருகின்றனர். மீன்களைப் பதப்படுத்தி வைக்க அந்தப் பகுதியிலே வாய்ப்பு இல்லை. இந்த நிலையில் இக்கிராமத்தில் புதிதாகக் குளிர்ப்பதன நிலையம் அமைக்கும்பட்சத்தில், குளிர்ப்பதன நிலையத்தினைத் தொடர்ந்து பராமரித்துச் செயல்படுத்தும் அளவிற்கு வருவாய் ஈட்டும் வாய்ப்பு மிகக் குறைவாகவே உள்ளது. எனினும் ராஜாக்கமங்கலத்தில் BOOT system மூலம் அமைக்கப்படும் துறைமுகத்தில் ஏற்படுத்தப்படும் அடிப்படை வசதிகளை கேசவன்புத்தன்துறை மற்றும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துரைத்த மற்ற மீனவ கிராமங்களும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

திரு. அ. ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேசவன்புத்தன்துறை சிறிய மீனவக் கிராமமாக இருந்தாலும்கூட அதைச்சுற்றி 10 மீனவக் கிராமங்கள் இருக்கின்றன. எனவே, கேசவன்புத்தன்துறையில் குளிர்சாதன வசதியுடன் கூடிய கட்டடம்

2010 ஏப்ரல் 15]

அமைக்கப்படும்போது அந்தப் பகுதி மீனவர்களுக்கு அது வசதியாக இருக்கும். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தலைவர் கலைஞருடைய ஆட்சியில்தான் ஏராளமான புனரமைப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, அவர்கள் வாழ்க்கையில் ஒளியேற்றப்பட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. மீனவர் நல வாரியம், மீனவர்களின் கூட்டுறவுக் கடன் இரத்து போன்ற ஏராளமான நல்ல பணிகளைச் செய்த தலைவர் கலைஞருடைய அரசு, நேற்று நள்ளிரவு முதல் மே மாதம் 31 ஆம் தேதி வரை தொடர்ந்து 45 நாட்கள் விசைப் படகு மீனவர்கள் கடலுக்குச் செல்ல வாய்ப்பு இல்லாத நிலையைக் கருத்திற்கொண்டு, அந்தக் காலகட்டத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உதவித் தொகையான மீன்பிடி தடைக்கால நிவாரணம் ரூ.500 என்பது போதாத காரணத்தால் அதை உயர்த்தித் தர நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப்போல, 2004 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமிக்குப் பிறகு அ.தி.மு.க. ஆட்சியிலே இருந்தவர்கள் மீனவ மக்களுக்குச் செய்யத் தவறிய காரியங்களை நம்முடைய தமிழகத்தினுடைய வரலாற்று முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு தருணங்களில் 'ஒன்றா, இரண்டா எடுத்துச் சொல்ல' என்பதைப்போல, பல உதவிகளைச் செய்து வருவதை நாடு நன்கு அறியும். அதைப்போலவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்ட நெடுங்காலமாக மீனவ மக்களிடம் இருந்து வந்த கோரிக்கையை ஏற்று மீன்பிடித் தொழில் தடை செய்யப்பட்ட 45 நாட்களுக்கு, கடற்கரையில் இருக்கின்ற சுமார் 2 இலட்சம் மீனவக் குடும்பங்களுக்கு தலா ரூ.500 வீதம், ரூ.10 கோடியை நிவாரணத் தொகையாக முதன்முதலில் அறிவித்தவர் நம்முடைய வரலாற்று முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை மேலும் உயர்த்தித் தர வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோரிக்கை வைத்துள்ளார்கள். நம்முடைய மாண்புமிகு தமிழகத்தின் வரலாற்று முதல்வர் ஐயா கலைஞர் அவர்களும்,

துணை முதல்வர் அண்ணன் தளபதியார் அவர்களும் என்னுடைய மீன்வளத் துறை மானியக் கோரிக்கையின்போது இதற்கான அறிவிப்பை வெளியிடுவார்கள் என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயம் சண்முகம்.

திரு. உதயம் சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறந்தாங்கி தொகுதியில் ஏறத்தாழ 35 கிலோ மீட்டர் மீனவர்கள் வாழ்கிற பகுதியாக உள்ளது. அப்பகுதியில் ஏறத்தாழ 10 ஆயிரம் மீனவர்கள் வாழ்கிறார்கள். 40 ஆண்டு காலமாகத் தொடர்ந்து நாகப்பட்டினம், பூம்புகார், அக்கரைப்பேட்டை, பொறையார், காரைக்கால், தொண்டி, நம்புவாளை, குளச்சல், ஆலந்தலை ஆகிய பகுதிகளில் அவர்கள் தங்கியுள்ளார்கள். ஏறத்தாழ 3,000 விசைப் படகுகள் இருக்கின்றன, 2,000 நாட்டுப் படகுகள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சரைப் பொறுத்தவரையில் 20 ஆண்டுக் காலமாக அந்தப் பகுதியிலுள்ள மீனவர்களுடைய நிலை தெரிந்தவர். அமைச்சராகப் பொறுப்பேற்று 4 முறை அந்தத் தொகுதிக்கு வந்து அந்த மக்களைச் சந்தித்திருக்கிறார். அங்கு ஒரு குளிர்சாதனப் பெட்டி வேண்டும். அந்த வசதிக்கு அந்தப் பகுதியிலிருந்து ஏறத்தாழ 200 கிலோ மீட்டருக்கு மேல் செல்ல வேண்டியிருக்கிறது. அந்தப் பகுதிக்கு ஒரு குளிர்சாதனப் பெட்டி வழங்க வேண்டுமென்று நான் தொடர்ந்து 4 ஆண்டு காலமாகக் கேட்டு வருகிறேன். இந்த ஆண்டாவது மாண்புமிகு அமைச்சர் இதனை அறிவிப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. விடியல் எஸ். சேகர்.

2010 ஏப்ரல் 15]

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகத்தினுடைய பணிகள் குறித்து சட்டப் பேரவையில் அறிவித்தும் இன்னும் அந்தப் பணிகள் துவங்கப்படவில்லை. திரு. ஜெயபால் அண்ணன் அவர்களும், நாங்களும் சட்டமன்றக் குழுவின் ஆய்வுப் பயணத்தின்போது அங்கு சென்றிருந்தபோது இது குறித்து ஆய்வு செய்தோம். அங்கே அந்தப் பணிகள் எப்போது துவங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகப் பணி துவங்கி நடைபெற்றுக்கொண்டிருந்தது. இடையில் குளச்சல் மீனவ கிராம மக்களுக்கும், அந்த ஒப்பந்ததாரருக்கும் இடையிலே சில பிரச்சினைகள் ஏற்பட்டு, அது நடைமுறையில் உள்ள சாத்தியக்கூறுகளின்படி இல்லாமல், அதனை இன்னும் பெரிய அளவில் செய்ய வேண்டும் என்று அந்தப் பகுதி மீனவ மக்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். அந்த வகையில், அம்மாவட்டத்தின் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. சுரேஷ் ராஜன் அவர்களும், நானும் மற்றும் மீன்வளத் துறை அதிகாரிகளும், மீன்பிடித் துறைமுகம் சம்மந்தப்பட்ட அதிகாரிகளும் கலந்து ஆலோசித்திருக்கிறோம். விரைவில் அந்தத் துறைமுகப் பணி தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

50—

பட்டா

***61385—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி கிராமம், பாகல்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு மனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?